## மொழியியல் மற்றும் இலக்கியம்

இஸ்லாமிய அறிஞர்கள் அரபிமொழி மற்றும் இலக்கியத்திற்கு மிகவும் முக்கியத்தவம் அளித்துள்ளனர், ஏனெனில், மற்ற இஸ்லாமியக் கலைகள் மற்றும் இலக்கியங்களை நன்கறிந்து விளக்கங்களைப்பெறுவதற்கு அரபி மொழி மிகவும் இன்றியமையாததாக உள்ளது. ஆகவேதான், அறிஞர்கள் இம்மொழியின் அட்சர எழுத்துக்கள் மற்றும் அதனுடைய தனித்தன்மை களை ஆய்வுக்குட்படுத்தி மொழியியலில் ஒரு தனிப் பிரிவினை உண்டாக் கினார்கள், அதனை ஒலிப்பியல் **ஃஇல்முல் அஸ்வாத்** எனப் பெயரிட்டனர். இது மொழியின்ஒவ்வொரு எழுத்தினையும்அனைத்து அம்சங்களின் அடிப் படையிலும் ஆய்ந்தறிகின்றது. இக்கலையினை மேம்படுத்தி விரிவாக்கு வதில் க்ஹலீல் பின் அஹ்மத் அல் ஃபராஹீதி மற்றும் இப்னு ஜின்னி ஆகியோர் முக்கியப் பங்காற்றியுள்ளனர்.

அறிஞர்கள்(உலமாக்கள்) ஒவ்வொருசொல்லையும்கவனத்துடன் கையாண் டுள்ளனர், அது ஒரு பெயர்ச்சொல்லாகவோ, வினைச்சொல்லாகவோ அல் லது இடைச்சொல்லாகவோ இருக்கும். பெயர்ச்சொல் மற்றும் வினைச் சொற்களில் மூல எழுத்துக்கள் மற்றும் கூடுதலான எழுத்துக்கள் ஆகிய வற்றை அடையாளம் கண்டு அதற்கான விதிகளை நிர்ணயித்துள்ளனர். இந்தக் கலை ஸர்ஃப் (சொல்லிலக்கணம்) எனப்படும். இத்துறையில் ஒரு மகத்தான பணியினை மேற்கொண்டவர் பிரபல மொழியியல் வல்லுநர் மற்றும் அறிஞர் சீபவைஹ் ஆவார்.

இவ்வாறே, சில அறிஞர்கள் சொற்களை ஆய்வு செய்து அவை மற்ற சொற் களுடன் இணையும்போது அவை இணைவதற்கான சில விதிமுறைகளை விவரித்துக்கூறியுள்ளனர் மற்றும் வாக்கியங்களிலும் சொற்றொடர்களிலும் இறுதியில் வரும் எழுத்துக்களின்மீது அவற்றின் நிலைகளுக்கேற்ப ஒலிக் குறியிட்டு அதற்கான விளக்கமும் அளித்துள்ளனர், இவ்வகையில், நஹ்வு எனும் அணியிலக்கணத்திற்கு வித்திட்டனர். முதன் முதலாக, இந்தக்கலை, அதாவது, இலக்கண விதிமுறைகளை விளக்கும் நூலைத் தொகுத்தளித் தவர், பிரபல மொழியியல் அறிஞர் சீபவைஹ் அவர்களேயாவார். அவர் ஒரு நூலைத்தொகுத்துள்ளார்கள், அதன் பெயர் **அல் கிதாப்** என்பதாகும்.

மொழியியல் அறிஞர்கள் **இல்முல் முஃஜம்** (அகராதி தொகுப்பு) மற்றும் **இல் முத் தலாலஹ்** ஆகிய இரு கலைகளைத் தோற்றுவித்தனர். **இல்முல் முஃஜம்** தனிச் சொற்களின் பொருளைத் தொகுத்தளிக்கும் கலையாகும், **இல்முத் தலாலஹ்** அச்சொற்கள் பயன்படுத்தப்படும் பின்னணி மற்றும் மொழி நடை ஆகியவற்றை எடுத்துக்காட்டுகளுடன்விவரித்துக்காட்டுவதாகும்.

www.uzairlalani.com

இவ்வகையில், நம்முடைய அறிஞர் பெருமக்கள் மொழி மற்றும் இலக்கியத்தின் அனைத்து அம்சங்களையும் ஆய்ந்தறிந்து தொகுத்தளித்துள்ளார்கள். இதன் மூலம் இந்த மொழி மற்றும் இந்த மொழியினைப் பேசும் மக்கள் அனைவரின் அந்தஸ்தும் உயர்ந்தது மற்றும் எண்ணற்ற இலக்கிய வல்லுநர்கள், கவிஞர்கள் மற்றும் பேச்சாளர்கள் உருவாகினர். பல்வேறு இஸ்லாமிய நாடுகளில் அறிஞர்கள் இத்துறையில் மிகவும் பிரபலமடைந்துள்ளனர்.

எகிப்தில் அஹ்மத் பின் ஜாஃபர் தய்னூரி (மறைவு ஹிஜ்ரி 289) அவர்கள் **இஸ்லாஹு ல் மன்த்திஃக்** எனும் நூலைத் தொகுத்தளித்துள்ளார். அபூ ஜாஃபர் அந்நுஹ்ஹாஸ் (மறைவு ஹிஜ்ரி 338) அவர்கள் **இஃராபுல் ஃகுர்ஆன்** மற்றும் **மஃஆனில் ஃகுர்ஆன்** ஆகிய நூல்களைத் தொகுத்தளித்துள்ளார்கள் மற்றும் சீபவைஹ் அவர்களின் கவிதைகளுக்கு விளக்கவுரையும் தொகுத்தளித்துள்ளார்கள்.

ஈராக்கில் அபூ அலி அல்ஃபாரிசியின் மாணவரான இப்னு ஜின்னி அவர்கள் பல நூல்களைத் தொகுத்துள்ளார்கள். உதாரணமாக, **சிர்ரு ஸினாஃஅதுல் இஃராப்** மற்றும் **அல் க்ஹஸாஇஸ்** அகியன. இவருடைய மறைவு ஹிஜ்ரி 392 ல் நிகழ்ந்தது. அபூ ஃஉபைத் அல்ஃகாசிம் பின் சல்லாம் அவர்களின் பல நூல்கள் உள்ளன. குறிப்பாக, **ங்கரீபுல் முஜ்தஃஅஃப்** மற்றும் **ஃபீ மஃஆனிஷ் ஷிஃரி** ஆகியன. இவ்வாறே, ஈராக்கின் பிரபல மொழியியல் வல்லுநர் இப்னு க்ஹாலவைஹ் (மறைவு ஹிஜ்ரி 370) அவர்கள் **இஃராபு த்ஸலாத்ஸீன் சூரஹ், வ லைச மின் கலாமில் அரப்** மற்றும் **அல் மஃக்ஸூ ர் வல் மம்தூத்** போன்ற நூல்களையும் தொகுத்தளித்துள்ளார்கள்.

அரபிமொழி இஸ்லாமியக் கலாச்சாரத்தின் மொழியாகும். எந்த நாடுகள் முற்காலத்து முஸ்லிம் ஆட்சியாளர்களால் வென்றெடுக்கப்பட்டனவோ அங்கிருந்த குடிமக்கள் இந்த மொழியினைக் கற்றுக்கொண்டார்கள், இவ்வகையில் அரபிமொழி அனைத்து இஸ்லாமிய நாடுகளில் அறிவியல் மற்றும் பல்வேறு கலைகளின் மொழியாகத் திகழ்ந்தது.

## வரலாறு

வரலாறு என்பது கடந்துவிட்ட காலத்தைப்பற்றிய உண்மைகளைப் பாதுகாத்து வைக்கும் ஒரு கலையாகும், இது பல்வேறு காலக்கட்டங்களில் மனிதர்களுடைய நடமாட்டங்கள், அவர்களுடைய அறிவு வளர்ச்சி மற்றும் கல்வியின் ஆதாரங்களை பத்திரமாகத் தொகுத்துப் பாதுகாத்து வைக்கின்றது. பல்வேறு கலைகளின் வரலாற்று ஆசிரியர்கள் தஃப்சீர் கலை, ஹதீத்ஸ் கலை, மொழியியல், திருமறை ஓதும் கலை, மார்க்கச் சட்டக்கலை மற்றும்

www.uzairaldhi.com

பல்வேறு கலைகளில் வரலாற்றினைத் தொகுத்தளித்துள்ள சிறப்பினைப் பெற்றுள்ளனர். அவர்கள் இத்துறைகளில் ஒரு மகத்தான சாதனையைப் புரிந்துள்ளார்கள்.

முஸ்லிம் வரலாற்று ஆசிரியர்கள் இஸ்லாமிய வரலாற்றைத் தொகுத்தளிப் பதில் முக்கியமான பங்காற்றியுள்ளனர். அவர்கள் இக்கலையினை அடிப் படையான, உண்மையான ஆதாரங்களைக்கொண்டே தொகுத்தளித்துள் ளார்கள், குறிப்பாக, இறைத்தூதர் ﷺ அவர்களுடைய புனிதமான வாழ்க்கை வரலாற்றினை ஆதாரப்பூர்வமாகவே தொகுத்தளித்துள்ளனர்.

முற்காலத்தில் ஹிஜாஜ்ஸ் நகரில் ஹஜ்ரத் இபான் பின் உத்ஸ்மான் பின் அஃப்பான் (மறைவு ஹிஜ்ரி 105) மற்றும் ஃஆஸிம் பின் உமர் பின் ஃகதாதஹ் (மறைவு ஹிஜ்ரி 141) ஆகியோர் நேர்மையான க்ஹலீஃபாக்கள் மற்றும் உமையாத் க்ஹலீஃபாக்களின் சுருக்கமான வரலாற்றினைத் தொகுத்துள்ளார்கள், அத்துடன், அவர்கள் இறைத்தூதர் ﷺ அவர்களுடைய போர்களைப்பற்றியும் (ங்கஜ்ஸ்வாக்கள்) எழுதியுள்ளார்கள். முஹம்மத் பின் உமர் அல் வாஃகிதி (ஹிஜ்ரி 130-207) **கிதாபுல் மங்காஜ்ஸி** மற்றும் **கிதாபுல் ஃபுதூஹ்** ஆகிய நூல்களைத் தொகுத்துள்ளார்கள். இந்நூல்கள் அவர் கள் எகிப்து மற்றும் சிரியா நாட்டில் இஸ்லாமியர்கள் போர்களில் கண்ட வெற்றியின் வரலாற்றினை எழுதியுள்ளார்கள்.

சீரியா நாட்டில் அல்லாமா அல் அவ்ஜ்ஸாயி (மறைவு ஹிஜ்ரி 157) மற்றும் அபூ இஸ்ஹாஃக் அல் ஃபராஜ்ஸி (மறைவு ஹிஜ்ரி 188) ஆகியோர் வாழ்ந் தனர்.

எமன் நாட்டில் மிகப் பிரபலமான பழம்பெரும் வரலாற்று ஆசிரியர்கள் இருந்தனர். உதாரணமாக, வஹ்ப பின் முனப்பஹ் (மறைவு ஹிஜ்ரி 110) மற்றும் முஃஅம்மர் பின் ராஷித் (மறைவு ஹிஜ்ரி 154) ஆகியோர். நாம் எமன் நாட்டு வரலாற்று அசிரியர்களுடைய நூல்களை வாசித்துப் பார்க் கும்போது அவர்கள் இஸ்லாத்திற்கு முந்திய வரலாற்றினையும் தொகுத் தளித்துள்ளார்கள் என்பது நமக்கு தெளிவாகின்றது. ஆகவேதான், அவர் களுடைய நூல்களில் இஸ்லாத்திற்கு முன்பு வாழ்ந்த சமூகங்களைப் பற்றிய வரலாறு மற்றும் கதைகள் பார்க்கக் கிடைக்கின்றன.

எகிப்தில் எண்ணற்ற வரலாற்று ஆசிரியர்கள் இறைத்தூதர் ﷺ அவர்களு டைய வாழ்க்கை வரலாற்றுத் (சீரத்துன் நபி) தொகுப்புகளுக்கு முக்கியத்து வம் அளித்துள்ளனர், அவர்களுள் அப்துல்லஹ் பின் ஃஅம்ர் பின் ஃஆஸ் (ர) அவர்கள், யஜ்ஸீத் பின் ஹபீப் மற்றும் லைஸ் பின் சஃஅது ஆகியோர் பிரபலமானவர்கள்.

www.uzairfalahi.com

ஹிஜ்ரி மூன்றாம் நூற்றாண்டில் எகிப்து நாட்டின் மிகவும் பிரபலமான வரலாற்று ஆசிரியர் அப்துர் ரஹ்மான் பின் அப்துல்லாஹ் பின் அவானஹ் ஆவார்கள். இவர்கள் **புதூஹு மிஸ்ர் வஅக்ஹ்பாரிஹா** என்ற ஆதாரப்பூர்வமான நூலைத் தொகுத்தளித்துள்ளார்கள். இதில் அவர்கள் இஸ்லாத்திற்கு முன்பு இருந்த எகிப்தின் வரலாற்று நிகழ்வுகளையும், அந்நாட்டுப் போர்களில் இஸ்லாம் கண்ட வெற்றிகளைப்பற்றியும் மொராக்கோ மற்றும் உந்துலுஸ் (ஸ்பெயின்) நாட்டு வராலாறு மற்றும் ஹிஜ்ரி 246 வரையிலான எகிப்து நாட்டு ஃகாஜ்திகளின் வரலாற்றினையும் தொகுத்தளித்துள்ளார்கள்.

எகிப்து நாட்டின் வரலாற்றினைத் தொகுத்தளித்துள்ள வரலாற்று ஆசிரியர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமானதாகும், அவர்களுள், அல் பலவி, அல் கிந்தி, மற்றும் இப்னு ஜ்ஸவ்லாஃக் அகியோர் பிரபலமானவர்கள். எகிப்திய வரலாற்று ஆசிரியர்களில் பெருமளவில் பொதுவான கலைக் களஞ்சியங்களாகத் தொகுத்தளித்துள்ளவர்களும் உள்ளனர். உதாரணமாக, ஃகஷ்ஃகலந்தி எனும் ஆசிரியர் **ஸுப்ஹுல் ஆஷா ஃபீ ஸினாஃஅத்தில் இன்ஷா** எனும் நூலைத் தொகுத்துள்ளார்கள். பெருமளவிலான நூல்கள் எகிப்திய வரலாற்றைப்பற்றியே எழுதப்பட்டுள்ளன. உதாரணமாக, **அந்நுஜுமுஜ் ஸாஹிரஹ் ஃபீ அக்ஹ்பாரி மிஸ்ரல் ஃகாஹிரஹ்**. இதனை இப்னு தங்க்ரி பர்தி (மறைவு ஹிஜ்ரி 874) அவர்கள் தொகுத்தளித்துள்ளாதர்கள், மற்றும் இப்னு இயாஸ் அவர்கள் **பதாயிஉஜ்ஸுஹுர் ஃபிவஃகாயிஃஉத்துஹுர்** என்ற நூலைத் தொகுத்தளித்துள்ளார்கள்.

சில முஸ்லிம் வரலாற்று அசிரியர்கள் உலக வரலாற்றையும் தொகுத்து எழுதியுள்ளார்கள். உதாரணமாக, இப்னு ஜரீர் த்தபரி அவர்கள் தன்னுடைய நூலான **தாரீக்ஹுல் ஃஆலம்** என்ற நூலில் படைப்புகளின் துவக்கத்திலிருந்து ஹிஜ்ரி 303 வரையிலான வரலாற்றை எழுதியுள்ளார்கள். அவருடைய பல பாகங்களைக்கொண்ட இரண்டாவது நூலான **தாரீக்ஹுர் ருசுல் வல்முலூக்** என்ற நூலில் அவர்கள் காலத்தின் வரிசை[1] முறையின் அடிப்படையில் இஸ்லாமிய வரலாற்றிக்காக தனியாகவே ஒரு பாகத்தை ஒதுக்கியுள்ளார்கள்.

இவ்வாறே, இப்னு கத்ஸீர் (ரஹ்) அவர்கள் **அல்காமில் ஃபித் தாரீக்ஹ்** என்ற நூலையும் **தாரீக்ஹுல் ஃஆலம்** என்ற நூலையும் தொகுத்தளித்துள்ளார்கள். இந்நூலில் அவர்கள் இப்னு ஜரீர் (ரஹ்) அவர்களுடைய அணுகுமுறையினைக் கடைபிடித்து, ஒவ்வொரு காலக்கட்டத்தின் வரலாற்றையும் தனித் தனியாகவே தொகுத்தளித்துள்ளார்கள். இவர்களுடைய மறைவு ஹிஜ்ரி 630ல் நிகழ்ந்தது.

---

1 ஒவ்வொரு ஆண்டின் நிகழ்வுகள் கால வரிசை முறையில் தொகுத்தளிக்கும் முறை

இவர்கள் எழுதிய நூற்றுக்கணக்கான நூல்கள் அறிஞர்கள், ஆட்சியாளர்கள், ஃகாஜ்திகள், மருத்துவ வல்லுநர்கள், மார்க்கச்சட்ட வல்லுநர்கள், திருக் ஃகுர்ஆன் விரிவுரையாளர்கள் மற்றும் ஹதித்ஸ் கலை வல்லுநர்கள் ஆகி யோரின் வாழ்க்கை வரலாற்றின் நிகழ்வுகளால் நிறைந்து காணப்படுகின் றன. இவற்றின் மூலம் இவர்களின் மேன்மையும் உயர்வும் தெரியவருகின் றது மற்றும் தங்களுடைய வரலாறு மற்றும் மரபுகளைப் பாதுகாக்கும் வகையில் தொகுத்தளிப்பதற்காகஅவர்கள் மேற்கொண்டமகத்தான முயற்சி கள் மற்றும் கடுமையான உழைப்பினைப்பற்றி உணரவும் முடிகின்றது. இந்த நூல்களை மரபு முறையில் **குதுபுத்தராஜிம்** என்று அழைக்கின்றனர். இக்கலையின் சில பிரபலமான நூல்களின் பெயர்கள் இங்கே கொடுக்கப் படுகின்றன, அவையாவன: இப்னுல் அசீர் அவர்களுடைய நூல் **உசுதுல் ங்காபஹ் ஃபி மஃரிஃபதிஸ் ஸஹாபஹ்**, இப்னு அசத் அவர்களுடைய **அத்தப ஃகாதுல் குப்ரா**, சுபுகியுடைய நூல் **தபஃகாதுஷ் ஷாஃபியா குப்ரா** மற்றும் இமாம் த்ஜஹபியின் **சியரு ஃஆலாமின் நுபலா** ஆகியன குறிப்பிடத்தக்கவை.

* * *

www.uzairfalahi.com